செ.வெ. எண்: 407 நாள்: 4.7.2011

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (4.7.2011) தலைமைச் செயலகத்தில், சமூக நலத்துறையின் கீழ் செயல்படும் அரசு குழந்தைகள் காப்பகங்கள் மற்றும் அரசு சேவை இல்லங்களில் பயின்று கடந்த ஆண்டு (2010–2011) +2 பொதுத் தேர்வில் முதல் 3 இடங்களைப் பெற்ற மாணவிகளுக்கு ரொக்கப் பரிசுகளை வழங்கி தனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

தமிழக அரசு, சமூகநலத் துறை மூலம் ஆதரவற்ற குழந்தைகளுக்காக 27 அரசு குழந்தைகள் காப்பகங்கள் மற்றும் 7 அரசு சேவை இல்லங்களை நடத்தி வருகின்றது. இக்காப்பகங்களில் ஆதரவற்ற மற்றும் உற்றார் உறவினரை இழந்த, வறுமை கோட்டிற்குக் கீழே வாழும் குழந்தைகள், பெண்கள், விதவைகள் மற்றும் கணவனால் கைவிடப்பட்டோர் தங்கி பயனடைந்து வருகின்றனர். இவர்களுக்கு உணவு, உறைவிடம் மற்றும் கல்வி ஆகியவை தமிழக அரசால் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றது.

அரசு குழந்தைகள் காப்பகங்கள் மற்றும் அரசு சேவை இல்லங்களில் தங்கியுள்ள மாணவியர்களில், 510 மாணவியர்கள் கடந்த ஆண்டில் (2010–2011) +2 பொதுத் தேர்வு எழுதினர். இதில் அரசு குழந்தைகள் காப்பகங்களில் தங்கி பயின்ற 315 மாணவிகளும், அரசு சேவை இல்லங்களில் தங்கி பயின்ற 124 மாணவிகளும், மொத்தம் 439 மாணவிகள் தேர்ச்சி பெற்றனர். இது 86 சதவிகித தேர்ச்சி ஆகும்.

ஆதரவற்ற நிலையிலும் கூட படிப்பில் சிறப்பாக கவனம் செலுத்தி, அதிக மதிப்பெண்கள் பெற்று சாதனை படைத்த மாணவியர்களை ஊக்குவிக்கும் வகையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று அரசு சேவை இல்லங்களில் தங்கி பயின்றவர்களில் 1121 மதிப்பெண் பெற்று முதல் இடத்தை பெற்ற தாம்பரம் அரசு சேவை இல்லத்தின் மாணவி பி. சந்தியாவுக்கு ஆறாயிரம் ரூபாய் பரிசுத் தொகையும், 1097 மதிப்பெண் பெற்று இரண்டாம் இடத்தை பெற்ற திருநெல்வேலி அரசு

சேவை இல்லத்தின் மாணவி வி. செல்விக்கு ஐயாயிரம் ரூபாய் பரிசுத் தொகையும், 1078 மதிப்பெண் பெற்று மூன்றாம் இடத்தை பெற்ற திருநெல்வேலி அரசு சேவை இல்லத்தின் மாணவி என். சுமதிக்கு நாலாயிரம் ரூபாய் பரிசுத் தொகையும் வழங்கி பாராட்டி, தனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

மேலும் அரசு குழந்தைகள் காப்பகத்தில் தங்கி பயின்றவர்களில் 1044 மதிப்பெண் பெற்று முதல் இடத்தை பெற்ற தஞ்சாவூர் அரசு குழந்தைகள் காப்பகத்தின் மாணவி ஜி. பிரியங்கா தேவிக்கு ஆறாயிரம் ரூபாய் பரிசுத் தொகையும், 1032 மதிப்பெண் பெற்று இரண்டாம் இடத்தை பெற்ற புதுக்கோட்டை அரசு குழந்தைகள் காப்பகத்தின் மாணவி ஏ. சரண்யாவிற்கு ஐயாயிரம் ரூபாய் பரிசுத் தொகையும், 1030 மதிப்பெண் பெற்று மூன்றாம் இடத்தை பெற்ற புதுக்கோட்டை அரசு குழந்தைகள் காப்பகத்தின் மாணவி எச். பாக்யரதிக்கு நாலாயிரம் ரூபாய் பரிசுத் தொகையும் வழங்கி மாணவிகள் கல்வியில் தொடர்ந்து கவனம் செலுத்தி, வாழ்க்கையில் மென்மேலும் உயர வேண்டுமென்று தனது வாழ்த்தினை தெரிவித்தார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ரொக்கப் பரிசுகள் பெற்ற மாணவிகளுக்கும், தேர்ச்சி பெற்ற பிற மாணவிகளுக்கும் ஆக்கமும், ஊக்கமும் அளித்து கல்வியில் சிறக்க வைத்த அரசு குழந்தைகள் காப்பகங்கள் மற்றும் அரசு சேவை இல்லங்களைச் சேர்ந்த ஆசிரியர்கள் மற்றும் காப்பாளர்களுக்கு தனது வாழ்த்தினை தெரிவித்துக் கொண்டார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடமிருந்து ரொக்கப் பரிசுகளை பெற்றுக் கொண்ட மாணவிகள் தங்களது நெஞ்சார்ந்த நன்றியினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக் கொண்டார்கள்.

இந்நிகழ்வின்போது, மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் அவர்கள், தலைமைச் செயலாளர், சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை முதன்மைச் செயலாளர், சமூக நலத்துறை இயக்குநர் மற்றும் சமூக நலத்துறையின் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

* * * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.

நாள்: 4.7.2011